STAFF COPY
NOT FOR SALE

Registered as a Newspaper

New Master
INSTITUTE
B M.G. Lane, JAFFNA.
A/L 87 AUG.
ஒலியியல்
திரு. வர்ணம்
திங்கள் -- வெள்ளி
பிற்பகல் 8-00 மணி

# உதயன்

விலை: ரூ. 1-25

89 A/L
பிரிவு: II
ஆரம்பம் 28-03-87
விலங்கியல் - நாதநாதன்
தாவரவியல் - குமாரன்
பௌதிகவியல் - வர்ணம்
இரசாயனவியல் -
தில்லைநாதன்
தூய - பிரயோக கணிதம் -
திரு நல்லையா
New Master
INSTITUTE
B.M.G. Lane, JAFFNA.

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு பங்குனி மீ 23 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபா பிறை 06 (06.04 1987 UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 111

# பேச்சுக்களைத் தொடங்க ராஜீவ் மீண்டும் நிபந்தனை

## ஜே. ஆரின் பதில் நிபந்தனைகள் இவ்வாரம் பேர்ணுட் மூலம்

கொழும்பு, ஏப்ரல் 6

- ✶ போராளிகள் மீதான இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்தவேண்டும்-
- ✶ எரிபொருள் தடையை முற்றுமுழுதாக நீக்கவேண்டும்.
- ✶ அவ்வாறு செய்தால் தமிழ்க் குழுக்களைச் சமாதானப் பேச்சில் மீண்டும் கலந்துகொள்ளச் செய்ய முடியும்.

தூதுவர் டிக்ஸிற் மூலம் கடந்த வியாழக்கிழமை அனுப்பிய கடிதத்தில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவுக்குத் தெரியப்படுத்தி இருப்பதாக அறியப்படுகிறது.

பிரதமர் ராஜீவ் காந்தியின் இந்தக் கடிதத்துக்கான பதிலை ஜனாதிபதி ஜெயவர்த்தன புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரத்தின மூலம் அனுப்பி வைப்பார்.

திரு.திலகரத்தின இப்போது கொழும்புக்கு அழைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

பிரதமர் ராஜீவின் கடிதத்தை திரு. டிக்ஸிற் கையளித்துப் பேசிய பின்னர், திரு. ஜெயவர்த்தன அவரை மீண்டும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

பின்னர் ஜனாதிபதி தமது சிரேஷ்ட அமைச்சர்களுடன் பிரதமர் காந்தியின் கடிதம் பற்றி ஆலோசனை நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து கண்டிக்குச் சென்ற வெளிவிவகார அமைச்சர் ஜனுப் சாகுல் ஹமீது அவசரமாக கொழும்புக்கு அழைக்கப்பட்டார். சுமார் ஒரு மணி நேரம் ஜனாதிபதியுடன் அமைச்சர் ஹமீது பேச்சுக்களை நடத்தினார்

ஜனாதிபதி ஜே. ஆர் தமது பதிலை இந்தவாரம் அனுப்பி வைப்பார் என்று கொழும்பின் அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

போராளிகள் தாக்குதலைக் கைவிட்டால் இராணுவம் முகாமுக்குள் இருக்கும். எரிபொருள், தொலைபேசித் தொடர்புகள் மீது விதிக்கப்பட்ட தடைகள், பேச்சுகளுக்கு போராளிகள் சம்மதித்தவுடன் நீக்கப்படும்

—இந்தச் சாரப்படவே ஜனாதிபதியின் பதில் அமையக்கூடும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ - உ - ச)

### சுபநேரம்

06—04—1987
திங்கட்கிழமை

சுபநேரம்:
12-08 முதல் 1-38 வரை
ராகுகாலம் :
7-38 முதல் 9-08 வரை
இன்று பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அட்டமி பின்னிரவு 8. 38 வரை



கடிதத்துக்குக் கடிதம்... நிபந்தனைக்கு நிபந்தனை... இப்படியே காலம் கடந்து போறது தானே ஒழிய உருப்படியாய் ஒண்டும் இப்போதைக்கு நடக்கப்போறதில்லை!

சனிக்கிழமை இரவு

## நகரைக் கலக்கிய பீரங்கி, ஷெல்குண்டுகள்

### பாடசாலை, கடைகள் சேதம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

சனிக்கிழமை இரவு யாழ் கோட்டை முகாமிலிருந்தும் மண்டைதீவு கடற் பகுதியிலிருந்தும் யாழ்நகரை நோக்கி ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் யாழ் நகர் இரவில் கலங்கியது.

சனிக்கிழமை இரவு சுமார் 8.45 மணி தொடக்கம் விடியும் வரை விட்டு விட்டு ஷெல்லடியும், பீரங்கித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகளால் கே. கே. எஸ். வீதியில் உள்ள பல கடைகள் சேதமடைந்ததுடன் பாரதி பாஷா வித்தியாலயமும் சேதத்துக்குள்ளானது.

மண்டைதீவு கடற் பகுதியில் தரித்து நிற்கும் கப்பல்களில் இருந்து பயங்கரமான பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன இந்த ஷெல் குண்டுகள் குருநகர் கடற்கரைப் பகுதியில் விழுந்து வெடித்தன. இந்தப் பீரங்கித் தாக்குதல்களின் போது

(4-ஆம் பக்கம் பார்க்க)

## நாளை நகரில் கடையடைப்பு ஹர்த்தால், மறியற்போர்

யாழ்ப்பாணம் ஏப். 6

யாழ் நகரில் நாளை கடையடைப்பும் ஹர்த்தாலும் மேற்கொள்ளப்படவுள்ளன. செயலகம் முன் மறியற் போரும் நடைபெறும்.

யாழ் வர்த்தகர் சங்கமும் வட பிராந்திய மினிபஸ் போக்குவரத்துச் சங்கமும் இதனை ஏற்பாடு செய்துள்ளன.

கோட்டை முகாமில் இருந்து அடிக்கடி ஏவப்படும் ஷெல் குண்டுகளினால் நகரில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் பெரும் சேதம் அடைவதை கண்டித்தும்-

யாழ் ஆஸ்பத்திரி மீது அரச படையினர் ஷெல் தாக்குதல் மேற்கொண்டதைக் கண்டித்தும் இந்தக் கடையடைப்பும்-ஹர்த்தாலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாளை போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது

இதே நேரம் வர்த்தகர்கள் யாழ் செயலகம் முன் நாளை மறியல் போராட்டம் ஒன்றை நடத்தவும் தீர்மானித்துள்ளனர்.

மறியல் போராட்டத்தின்படுத்து யாழ் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படும் என வர்த்தகர் சங்க செயலாளர் திரு. எஸ். நமசிவாயம் தெரிவித்தார். (உ-10)

### நிர்ணய விலையில் எரிபொருள் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ் குடாநாட்டில் அரச அதிபரினால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு எரிபொருள் மக்களுக்கு கிடைக்கவில்லை. விலை நிர்ணயம் அறிவிக்கப்பட்டதும் எரிபொருளின் விலை ஓரளவு குறைந்த போதிலும் தவிர நிர்ணய விலைக்கு எரிபொருள் பெறமுடியவில்லை.

எரிபொருள் முகவர் நிலையங்களில் மண்ணெண்ணெய் மட்டுமே தற்பொழுது வழங்கப்பட்டுவருவதாகவும் அதுவும் அரச அதிபரினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்க சற்று கூடுதலான விலைக்கு விற்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

தனியார் விற்பனையாளர் நேற்று பெற்றோல் போத்தல் 30 ரூபாவாகவும் டீசல் போத்தல் 25 ரூபாவாகவும் மண்ணெண்ணெய் போத்தல் 15ரூபாவாகவும் விற்பனை செய்தனர். (உ-10)

## யாழ்-திருமலை பஸ்மீது இடைவழியில் கல்வீச்சு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றின் மீது சனிக்கிழமை கல்வீச்சு நடத்தப்பட்டது.

வெப்பிட்டிக் கொலராவ என்ற இடத்தினை பஸ் கடந்து சென்றுகொண்டிருந்தபொழுது மேற்படி சம்பவம் நடைபெற்றது.

மன்னார்ப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடி தாக்குதலில் பலியான சிப்பாய் ஒருவரின் மர

(4-ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஏப்6

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 18 மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்போரை விடுவிக்கக் கோரி மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்க சம்மேளனம் நேற்று அடையாள உண்ணாவிரதம் ஒன்றை மட்டக்களப்பில் நடத்தியது (உ)

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஏப் 6

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து நேற்று சிப்பாய்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் காலில் காயம் அடைந்தார்.

ரயில் பாதையூடாக நடந்து சென்ற சமயம் இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகத் தெரியவருகிறது. (உ-10)

## வல்வையில் நேற்றும் ஷெல் தாக்குதல்கள்

### வீடுகளும் தகர்க்கப்படுகின்றன

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 6

ஷெல் தாக்குதல், வீடுகள் தகர்ப்பு, துப்பாக்கிப் பிரயோகம் ஆகியன நேற்றும் வல்வெட்டித்துறையில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றுக் காலை 10மணி முதல் வல்வை இராணுவ முகாமில் இருந்து மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் பிரதேசத்தில் உள்ள பொதுமக்களின் வீடுகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

படையினர் ஏவிய ஷெல் ஒன்று வல்வெட்டி சந்தப்பா வளவில் திருமதி நவமணிதேவி சகாதேவனின் வீட்டுச் சமையல் அறையினுள் விழுந்து வெடித்தது.

இதனால் சமையல் அறை முற்றாகச் சேதமடைந்தது.

இந்த வீடு இரண்டாவது முறையாக ஷெல் தாக்குதலுக்கு இலக்கானது குறிப்பிடத்தக்கது. (உ-எ-160)

## கிழக்கில் 3 தாக்குதல்கள் 14 கொமாண்டோ பலி!

யாழ்ப்பாணம், ஏப். 5

நேற்றும், நேற்று முன்தினமும் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய மூன்று தாக்குதல்களில் பதினான்கிற்கும் அதிகமான கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர் என்று விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சனிக்கிழமை காலை கடவத்தைமடுவில் நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் ஐந்துக்கும் அதிகமான கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர் என்றும்-

திருக்கோவிலுக்கும் காஞ்சிரம் குடாவிற்கும் இடையில் நிகழ்த்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் 7 கொமாண்டோக்கள் உயிரிழந்தனர் என்றும்-

நேற்றுக்காலை கொக்கட்டிச் சோலையில் நிகழ்ந்த மோதலில் இரு கொமாண்டோக்கள் பலியாகினர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது!

இந்தச் சம்பவங்கள் குறித்து புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

### கடவத்தைமடு சம்பவம்

சனி காலை 9-30 மணியளவில் புனானை முகாமிலிருந்து வெலிகந்தை முகாமிற்கு ஒரு பிக்கப், இரு எக்ஸ்ட்ராக் ஆகியவற்றில் சென்ற படையினர் மீது கடவத்தைமடுவில் நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் 'எல்வ்' ட்ரக் பலத்த சேதமடைந்தது.

அதையடுத்து நேரடி மோதல் நிகழ்ந்தது. 5 கொமாண்டோக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு

## காவலில் இருந்து தப்ப முயன்ற 18 பேர் மோதலின்போது கொலையுண்டனர்

### தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை உறவினர் பார்க்கலாம்; 30 ஆம் திகதிச் சம்பவம் குறித்துப் புலிகள் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 6

எமது காவலில் இருந்த பலர் திட்டமிட்ட முறையில் ஆயுதங்களைப் பறித்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு தப்பிச் செல்ல முயன்ற வேளையில் அவர்களுக்கு எதிராக சுடவேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த மோதலில் எமது காவலில் இருந்த 18 பேரும் எமது இயக்கப் போராளிகள் இருவரும் கொல்லப்பட்டனர்-இப்படி விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழீழப்போர் மிகத் தீவிரமடைந்து வரும் இன்றைய சூழ்நிலையில் போராட்டத்தில் குழப்பங்களை உண்டுபண்ணக் கூடிய விதமான விஷமப் பிரசாரங்களை சிறீலங்கா அரசு முதலான பல்வகைப்பட்ட சதி கும்பல்கள் மேற்கொண்டு வருகின்றன.

இந்த வகையில் கடந்த 30ஆம் திகதியன்று நடந்த சம்பவம் குறித்து திட்டமிட்ட வகையில் பல வதந்திகள், பொய்ப் பிரசாரங்கள் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வருகின்றன.

எனவே அச்சம்பவம் குறித்து உண்மையான விபரமான நிலையை மக்களுக்கு அறியத் தருகிறோம்.

எம்மால் தடை செய்யப்பட்ட இயக்கத்தில் மீண்டும் எமக்கு எதிராக இயங்கி வேளைகளையும், துரோகத்தனமான குற்றச்சாட்டு உள்ளோரையும் எமது முகாம் ஒன்றில் தடுப்புக் காவலில் வைத்திருந்தோம்.

இவ்வாறு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தோர் நன்கு திட்டமிட்டு கடந்த 30 ஆம் திகதியன்று தடுப்புக் காவல் முகாமில் காவலிலிருந்த எமது இரு வீரர்களின் ஆயுதங்களை பறித்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்த விகடன் ஆசிரியருக்காக சிதம்பரம் மன்னிப்புக் கோருகிறார்

சென்னை, ஏப்ரல் 6

ஆனந்த விகடன் ஆசிரியரை உடனே விடுதலை செய்யுங்கள் அவருக்காக நான் மன்னிப்புக் கோருகின்றேன் (ஆனந்த விகடனின்) லட்சக்கணக்கான வாசகர்களில் ஒருவன் என்ற முறையில் இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன்-

-இப்படி இணையமைச்சர் ப. சிதம்பரம் தமிழ்நாடு சட்டசபைக்கு விண்ணப்பித்துக் கொண்டுள்ளார்.

புதுடில்லியில் இருந்து சென்னைக்கு திரு சிதம்பரம் நேற்று வந்தார்.

அதன் பின்னர் வீடு திரும்பிய கையோடு நிலையே திரு.சிதம்பரம் இப்படி விண்ணப்பித்துக் கொண்டார்

ஆனந்த விகடன் ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியத்துக்கு சிறைத் தண்டனை விதித்தது எனக்கு ஆழ்ந்த கவலையைத் தருகிறது- இப்படி சொன்ன திரு சிதம்பரம்

''தமிழ்க்கலை, கலாசார வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்துக்கொண்ட திரு. எஸ். எஸ். வாசனின் புதல்வரே திரு. பாலசுப்பிரமணியம்'' என்றும் குறிப்பிட்டார்.

அறிக்கையை விடுத

(4-ஆம் பக்கம் பார்க்க)

## சனி, ஞாயிறில் ஆலயங்களில் தஞ்சம்

யாழ்ப்பாணம், ஏப்6

சனி, ஞாயிறு தினங்களில் ஏராளமான பொது மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி ஆலயங்களிலும் பாடசாலைகளிலும், சன சமூக நிலையங்களிலும் தங்கியிருந்தனர்.

ஸ்ரீலங்கா அரச படையினரின் இரு விமானத் தாக்குதல்கள் இந்த நாட்களிலும் அதிகமாக நடைபெறுவதாலேயே மக்கள் பயத்தினால் இவ்வாறு முன்னெச்சரிக்கையுடன் வீடுகளைவிட்டு வெளி

## கொக்கட்டிச் சோலையில் பொம்மர் தாக்குதல்கள்

### ஒரு மணிநேரம் கொடூரம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் அதிகமாக வாழும் கொக்கட்டிச்சோலையிலும் அதை அண்டிய பகுதிகளிலும் ஸ்ரீலங்கா அரச படையின் விமானங்கள் நேற்றுக்காலையில் சுமார் ஒரு மணி நேரம் பயங்கரக் குண்டுவீச்சுத் தாக்

இந்தத் தாக்குதலில் குடிமனைகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகப் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

எனினும் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய முழு விவரங்களையும் ஊர்ஜிதம் செய்யும் தகவல்கள் ஏதும் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

நேற்று அதிகாலை கொக்கட்டிச்சோலையில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை முற்றுகையிட படையினர் எடுத்த முயற்சி புலிகளினால் முறியடிக்கப்பட்டது.

அதனை அடுத்தே அப்பகுதியில் பொம்மர் தாக்குதல்கள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**உதய சங்கற்பம்**

கடவுளிடம் சரண் புகுகின்றவன் காப்பாற்றப்படுகின்றான்.

—அன்னை சாரதாதேவி

உதயன்

இல, 16, சுழுவதழுமுவை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 23078
யாழ்ப்பாணம் 6-04-1987 உ.செ இல 88

## அமெரிக்காவும் இந்தியாவும்

அடுத்த வருடத்தில் பாகிஸ்தானுக்கு வழங்கும் அபிவிருத்திக்கான உதவியை அமெரிக்கா இரண்டு மடங்காக உயர்த்துவதற்கு முடிவு செய்திருக்கிறது.

அதேவேளை இந்தியாவுக்கு வழங்கும் அபிவிருத்தி உதவியை அமெரிக்க நாடாளுமன்ற வெளிவிவகாரக் கமிட்டி வெட்டி இருக்கிறது.

பாகிஸ்தான் இந்தியாவுக்குப் போட்டியான அல்லது நிகரான ஒரு பலம் பொருந்திய சக்தியாக வேண்டும் என்பது அமெரிக்காவின் விருப்பம்.

இந்தியா சோவியத் ரஷ்யாவுடன் அதிக அளவில் நட்புறவு வைத்திருக்கிறது. ஆகவே பாகிஸ்தானைத் தன் வசம் வைத்திருந்து – பைப்பொம்மையாக வைத்திருந்து – ரஷ்யாவுடன் முட்டி மோதுவதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதும் அமெரிக்காவின் எண்ணமாகும்.

தனது எதிரியுடன் நட்பு வைத்திருப்பவனும் தனக்கு எதிரி என்ற கோட்பாட்டுடன் அமெரிக்கா எப்போதும் இந்தியாவைச் சந்தேகத்துடன் பார்ப்பது உண்டு.

இந்திரா காந்தியின் பதவிக் காலத்தில் இந்திய – ரஷ்ய உறவு மிகவும் நெருக்கமாகவும் இறுக்கமாகவும் இருந்தது. ராஜீவ் பதவிக்கு வந்ததும் அந்த நிலையை மாற்ற வேண்டும் என அமெரிக்கா விரும்பியது. ராஜீவும் வெளிநாட்டுக் கொள்கையில் எல்லோருடனும் உறவு கொண்டாடும் நிலையில் இருக்க வேண்டும் என்ற விருப்பமுடையவராக இருந்தார்.

ஆனால் அமெரிக்காவோ பாகிஸ்தானுக்கான தனது தங்குதடையில்லாத ஆதரவையும், உதவியையும் நிறுத்தாமலே இந்தியாவின் நட்பையும் பெற முனைந்தது.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளிலேயே பாகிஸ்தானை ஓர் அணுசக்தி வல்லமை பொருந்திய நாடாக மாற்றவும் அமெரிக்கா முன்னின்று உழைக்கிறது; உதவுகிறது.

தனது எதிரியின் நண்பனும் தனக்கு எதிரி என்று நினைக்கும் அமெரிக்கா, இந்தியாவின் எதிரியாக உருவெடுத்து வரும் பாகிஸ்தானுக்குத் தான் உதவிக் கொண்டு, எப்படி இந்தியா தன்னுடன் நண்பனாக உறவு கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியும்?

பாகிஸ்தானை தனது சொந்தப்பிள்ளை போல வளர்த்துவரும் அமெரிக்காவின் போக்கை அறியாமல் இருக்க இந்தியா என்ன குழந்தைப் பிள்ளையா?

இந்த வகையில் இந்தியா சோவியத்துடனான தனது உறவைக் குறைத்துக் கொள்ளும் என்றோ அல்லது குறைத்துக் கொள்ள வேண்டும் என்றோ அமெரிக்கா எதிர்பார்த்திருந்தால் அதனைப் போல ஒரு முட்டாள்தனம் உலகத்தில் வேறு இருக்க முடியாது!

ஆனால் இந்தியாவுக்கான உதவியைக் குறைத்ததற்காக அமெரிக்க வெளிவிவகாரக் குழு கூறும் காரணங்கள் இரண்டு. அவற்றில் ஒன்று ஐ. நா. சபையில் இந்தியா எப்போதும் அமெரிக்க எதிர்ப்பு அணியில் நிற்பது என்பதாகும். சோவியத் ரஷ்யாவுடன் நெருங்கிய உறவுகளை வைத்திருப்பது என்பதே இரண்டாவது காரணமாகும்.

இன்னொரு நாட்டுக்கு வழங்கும் உதவியைக் கூட்டுவதா, குறைப்பதா அல்லது நிறுத்துவதா என்பதைத் தீர்மானிக்கும் முழு உரிமையும் உதவி வழங்கும் நாட்டுக்கு மட்டுமே உண்டு.

எனினும் இந்தியாவுக்கான உதவியைக் குறைப்பதற்கு அமெரிக்கா கூறும் காரணம் அதன் குறுகிய மனப்பான்மையைப் பிரதிபலிக்கிறது. பிரதியுபகாரத்தை எதிர்பார்த்துச் செய்யும் தானம் பயனற்றது என்பதை அமெரிக்கா உணரவில்லை.

தன்னைச் சார்ந்தவர்களுக்கு, தமக்கு ஆதரவானவர்களுக்கு, தனது நோக்கங்களை நிறைவேற்ற உதவுவோருக்கு மட்டுமே அமெரிக்கா உதவி செய்யும் என்பது இதிலிருந்து புலனாகிறது. நிதி உதவி செய்வதிலும் ஏகாதிபத்தியக் குணம்சம் மிளிர்வது தெரிகிறது. இந்தியாவின் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையிலும் அமெரிக்கா கோபம் அடைந்திருப்பதையும் இது எடுத்துக்காட்டுகிறது.

இந்தப் பின்னணியில் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள நெருங்கிய உறவும், பாகிஸ்தான் ஊடாக அமெரிக்க இராணுவ உதவி இலங்கைக்குக் கிடைத்து வருவதாகக் கூறப்படுவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

அது மட்டுமா? இனப்பிரச்சினையை தீர்ப்பதில் இந்தியா பங்குபற்றுவதை இலங்கையோ அல்லது அமெரிக்காவோ அல்லது பாகிஸ்தானோ உள்ளார்த்தமாக விரும்புகின்றனவா என்பதும் சந்தேகமே!

இனப்பிரச்சினையில் இந்தியா நடந்து கொள்ளும் விதம் குறித்து அமெரிக்கா வெளியில் திருப்தி தெரிவித்தாலும் உண்மையில் இந்தியாவின் பங்கை அது விரும்புகிறதா என்பதும் சந்தேகத்திற்கு உரியதாகும்.

தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு ராஜீவ் கேட்டபோதிலும் இலங்கை அரசு அதனை பொருட்படுத்தாது தமிழர் மீதான தாக்குதல்களைத் தீவிரப்படுத்துவதன் அர்த்தமும், பின்னணியும், பலமும் இப்போது நன்றாகப் புரிகிறது அல்லவா?

இந்தச் சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்கு விரைவில் சமாதானத் தீர்வு கிடைக்கும் என்று நம்புவது புத்திசாலித்தனமா?

மே 7ஆம் திகதி

# பிரிட்டனில் திடீர் தேர்தல்?

லண்டன், ஏப்ரல் 5

எதிர் வரும் மே மாதம் 7ம் திகதி பிரிட்டனில் திடீர்ப்பொதுத் தேர்தல் நடைபெறலாம்.

லண்டனில் இன்று ஞாயிற்றுக்கிழமை வெளியான பத்திரிகைகள் இத்தகவலை வெளியிட்டுள்ளன.

பிரதமர் தாட்சரின் ரஷ்ய விஜயம் வெற்றிகரமாக அமைந்ததைத் தொடர்ந்து, ஆளும் கட்சியின் செல்வாக்கு பிரிட்டனில் அதிகரித்துள்ளது.

இதைத் தொடர்ந்து திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த திருமதி தாட்சர் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

ஆளும் கட்சியினர் இதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர்.

— இப்படி லண்டன் ஞாயிறு பத்திரிகைகள் பெரும்பாலானவை கருத்து வெளியிட்டுள்ளன. (உ-எ)

### பாப்பரசரின் விருப்பம்

மொண்டிவிடியோ, ஏப் 5

ரோமன் கத்தோலிக்க திருச்சபையினர் சிலி நாட்டில் மனித உரிமைகளுக்காக அரசாங்கத்திற்கு எதிராகப் பாடுபட வேண்டும்.

இவ்வாறு பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் உருகுவேயில் விருப்பம் தெரிவித்தார். (ஒ)

### ராஜதந்திரிகள் வெளியேற்றம்

மாஸ்கோ, ஏப் 5

ஆறு பிரெஞ்சுப் பிரசைகளை நாட்டை விட்டு வெளியேறும்படி ரஷ்யா உத்தரவிட்டுள்ளது.

மூன்று சோவியத் ராஜதந்திரிகளை வெளியேற்றிய பிரெஞ்சு அரசின் நடவடிக்கைக்குப் பதிலடியாகவே ரஷ்யா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. (உ-எ)

## மின்னல் தாக்கி விமானம் வெடித்தது

ஜாகர்த்தா, ஏப். 5

மின்னல் தாக்கி பயணிகள் விமானம் ஒன்று நடுவானில் வெடித்துச் சிதறியதில் 34 பயணிகள் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம், இந்தோனேஷியாவில் வட சுமத்திராவுக்கு அருகில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

விபத்தில் சிக்கிய விமானம் கருடா விமான சேவைக்குச் சொந்தமானது.

உயிரிழந்த பயணிகளில் ஒருவர் ஜப்பானிய ராஜதந்திரி.

இந்த விமானம், உள்ளூர் விமான நிலையம் ஒன்றில் தரையிறங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னரே மின்னலினால் தாக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து விமானத்தில் தீப்பற்றிக் கொண்டது.

5 பயணிகள், 4 விமானச்சிப்பந்திகள் இவ்விபத்தில் உயிர் தப்பிக் கொண்டனர். (உ-எ)

### ஆந்திராவில் தேவதாசிமுறை ஒழிப்பு

ஹைதராபாத், ஏப் 5

ஆந்திர மாநிலத்தில் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.

இதற்கான சட்ட மூலம் ஆந்திர மாநில சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

ஆந்திர மாநிலக் கோயில்களில் 16,000 வரையான பெண்கள் தேவதாசிகளாக பணி புரிகின்றனர். (இ-எ)

### எகிப்தில் தேர்தல்

கெய்ரோ, ஏப்ரல் 5

எகிப்தில் இன்று (திங்கள்) பொதுத் தேர்தல் நடைபெறும்.

தேர்தலை ஒட்டி நூற்றுக் கணக்கான எதிர்க்கட்சித் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர் என்று எதிர்க் கட்சிக் கூட்டணி குற்றஞ் சுமத்தியுள்ளது.

ஆளும் கட்சிக்கு எதிராக தொழில் கட்சி, லிபரல் கட்சி, முஸ்லிம் அடிப்படை உரிமைக் கட்சி ஆகியன கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிடுகின்றன. (உ-எ)

வெளி உலகில்

## இந்திரா காங்கிரஸ் பிராந்தியக் கட்சியாகிவிட்டது என்கிறார் ஆந்திர முதல்வர்

ஹைதராபாத், ஏப் 5

இந்திரா காங்கிரஸ் பிராந்தியக் கட்சியாகி விட்டது.

இப்படி ஆந்திர மாநில முதலமைச்சர் என். டி. ராமராவ் தெரிவித்தார்.

கேரளா மாநிலத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் அரசு பதவி இழந்ததை வைத்து திரு. ராமராவ் இக்கருத்தை வெளியிட்டார். இந்திரா காங்கிரஸ் வட இந்தியாவின் கட்சியாகி விட்டது.

தென் இந்திய மாநிலங்கள் காங்கிரஸ் கட்சியை நிராகரித்து விட்டன — இப்படி திரு. ராமராவ் தெரிவித்தார். (இ-எ)

### சஞ்சய் மஞ்ச் வெற்றி

லக்னோ, ஏப்ரல் 5

உத்தர பிரதேச மாநில சட்டசபைக்கான இடைத் தேர்தல் ஒன்றில் திருமதி மேனகா காந்தியின் கட்சி சஞ்சய் மஞ்சின் சார்பில் போட்டியிட்ட அக்பர் அகமது 8ஆயிரத்துக்கு அதிகமான வாக்குகளால் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் அமர் நிஸ்வியை வென்றார்.

தற்போது இந்திய மத்திய அரசில் வெளியுறவு அமைச்சராகப்பதவி வகிக்கும் திரு.என்.டி. திவாரி இந்தத் தொகுதியின் எம்.எல். ஏவாக முன்னர் பணியாற்றியிருந்தார். (ஒ)

### விசாரிக்க நீதிபதி நியமனம்

புதுடில்லி, ஏப்ரல் 5

வெளிநாடுகளில் பணம் சேர்த்து வைத்துள்ள இந்தியர்கள் பற்றிய தகவல்களைப் பெற அமெரிக்க உளவுநிறுவனம் ஒன்றின் உதவியை இந்திய அரசு நாடியதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை செய்ய நீதிபதி ஒருவர் நியமிக்கப்படவிருக்கிறார்.

இத்தகவலை பிரதமர் ராஜீவ் காந்தி இந்திய நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். (இ-எ)

## ராஜீவ் - சிவாஜி சந்தித்துப் பேச்சு

சென்னை, ஏப்ரல் 5

புதுடில்லியில் கடந்த சனிக்கிழமை பிரதமர் ராஜீவ் காந்தியை திரு. சிவாஜி கணேசன் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

தமிழ் நாட்டின் அரசியல் நிலைமை குறித்து இருவரும் பேசிக்கொண்டனர் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரபல நடிகர் சிவாஜி கணேசன் தமிழக இந்திரா காங்கிரஸின் முக்கிய உறுப்பினராவார்.

இந்திரா காங்கிரஸ் கட்சியில் அண்மையில் திரு. குமரி அனந்தன் இணைந்து கொண்டார் அல்லவா!

அதன் பின்னர் தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் யார் என்பதில் கலந்த போட்டி ஏற்பட்டுள்ளது.

பிரதமருடனான பேச்சில் இதுபற்றியும், அ.தி.மு.கவுடனான இந்திரா காங்கிரஸ் கூட்டணியின் எதிர்காலம் பற்றியும் திரு சிவாஜி கணேசன் பரிசீலனை செய்து இருக்கலாம் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (உ-எ)

### மண்சரிவில் 35 பேர் பலி

ஈகுவடோர், ஏப். 5

ஈகுவாடோரில் ஏற்பட்ட பெரிய மண் மேட்டுச் சரிவில் குறைந்தது 35பேர் உயிரிழந்தனர்.

சுமார் நூறு பேர் வரையில் காணாமற் போய்விட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

### கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஏப்ரல் 5

'ஆனந்தவிகடன்' ஆசிரியர் திரு. எஸ். பாலசுப்பிரமணியத்துக்கு மூன்று மாதக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது ஏற்புடையதல்ல. தண்டனை விலக்கப்படவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி மேற்கண்டவாறு கோரிக்கை விட்டிருக்கிறார். (உ-எ)

## ஆயுத விற்பனை: சுவீடன் கட்டுப்பாடு

ஸ்டொக்ஹோம், ஏப். 5

சிங்கப்பூரில் இயங்கும் கம்பனிகளுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதை சுவீடன் அரசு தடை செய்துள்ளது.

சுவீடனால் தடை செய்யப்பட்ட நாடுகளுக்கு சிங்கப்பூர் நிறுவனங்கள் ஆயுதங்களை விற்பனை செய்து வந்தது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓமான், துபாய், பஹ்ரைன், ஈரான் ஆகிய நாடுகளுக்கு ஆயுத விற்பனை செய்யப்படுவதை சுவீடன் அரசு ஏற்கனவே தடை செய்துள்ளது.

சுவீடனின் ஆயுத உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனம் ஒன்று சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றுக்கு ஏவுகணைகளை விற்றிருந்தது.

அந்த ஏவுகணைகளை சிங்கப்பூர் நிறுவனம் சுவீடனால் தடை செய்யப்பட்ட நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டது சம்பந்தமாக சுதந்திர விசாரணை ஒன்றை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. (உ-எ)



பொய்யாமொழி

குறள்:

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

பொருள்:

அறிவுடையவர் எதிர்காலத்தில் நிகழப் போவதனை முன்னே எண்ணி அறிபவர்; அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவர்.

# இருதரப்பிலும் ஏற்படும் இழப்புகள் வேதனை தருகின்றன

## கிறிஸ்தவ குழுக்கள் அறிக்கை

கொழும்பு, ஏப். 6

இருதரப்பிலும் இளைஞர்கள் பலியாவது, அப்பாவிக்குடியானவர்கள் (பெண்கள், குழந்தைகள் உட்பட) உயிரிழப்பது எமக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது.

தேசிய கிறிஸ்தவ சபையின் நீதியைப் பேணும் ஆணைக்குழு, ரோமன் கத்தோலிக்க பிஷப் சபையின் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு ஆகியன விடுத்த அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை வருமாறு;

கடந்த மாதம் 18 ஆம் திகதி இரண்டு குழுக்களின் இணைப்புக்கூட்டம் நடைபெற்றது.

வடபகுதியில் போராளிக் குழுக்களுக்கும் ஆயுதபடையினருக்கும் இடையே நடைபெறும் தாக்குதல், எதிர்த் தாக்குதல் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இரு தரப்பிலும் இளைஞர்கள் பலியாகின்றனர். அப்பாவிப் பெண்கள், குழந்தைகள் பலியாகின்றனர்.

பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள் சேதமடைந்துள்ளன. இவற்றில் சில பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. இதனால் கல்விச் சுதந்திரம் பாதிக்கப்படுகிறது. அடிப்படைத் தேவையான சுகாதார வசதி மறுக்கப்படுகிறது.

எல்லாவிதமான வன்செயல்களையும் நாம் கண்டிக்கிறோம். பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்படுவதன் மூலம் இவ்வன்செயல்கள் தடுக்கின்றன.

ஆகவே போராளிக் குழுக்களுக்கும் அரசுக்கும் கீழ்வரும் கோரிக்கைகளை விடுக்கின்றோம்.

1. அரசியல் தீர்வு ஒன்றைக்காண வன்செயல்களை நிறுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

2. கைப்பற்றப்பட்டுள்ள சகல பொதுக் கட்டடங்களும் காலி செய்யப்படவேண்டும் என்ன நோக்கத்துக்காக அக் கட்டடங்கள் கட்டப்பட்டனவோ அந்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட வழிசெய்து கொடுக்கப்பட வேண்டும்.

3. பேச்சுக்களுக்கான உகந்த சூழ்நிலையை உடனடியாக உருவாக்க பொதுசன தொடர்பு சாதனங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

சமய சந்நிதிகளில்

### மகோற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 6

நாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகிறது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செவ்வாய்க்கிழமை வருடப் பிறப்பு தினத்தில் இரதோற்சவமும், அடுத்த நாள் புதன் கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

பத்துத் தினங்களும் பஞ்சமுக விநாயகருக்கு இலட்சார்ச்சனை நடைபெற்று விநாயகப் பெருமானின் வீதியுலாக்காட்சியும் இடம்பெறும். (உ)

### சுன்னாகத்தில் இயங்கும்

சுன்னாகம், ஏப். 6

இன்றுமுதல் காமினி ... வங்கியும் சுன்னாகம் ... கட்டடத்திலேயே இயங்கும். (உ-37)

# அரசு வளர்க்கும் படை அதற்கே தீமை தரும்

## போராளியின் நினைவுதினக் கூட்டத்தில் யோகி

உடுப்பிட்டி, ஏப். 6

இன்று ஸ்ரீ லங்கா அரசாங்கம் தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்காக ஆயுதப் படையினரையும் ஊர்காவல் படையினரையும் பெருமளவில் வளர்த்துக் கொண்டு வருகின்றது. இவ்வாறு பெருமளவில் வளர்த்துக் கொண்டு வரும் ஊர்காவல் படையினரும், ஆயுதப் படையினரும் எதிர்காலத்தில் தென் பகுதிகளில் பாரிய குழப்பங்களில் ஈடுபடுவார்கள் அப்போது தென் பகுதியில் பல்வேறு வகையான பிரச்சினைகள் தோன்றும் இதற்கு ஈடு கொடுக்க முடியாமல் அரசு திண்டாடும் நிலை ஏற்படும்.

இவ்வாறு கடந்த வருடம் பருத்தித்துறையில் இராணுவத் தாக்குதலில் வீர மரணமடைந்த இ. சிறீஸ்கந்தநாதனின் (ஸ்டாலின்) முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நினைவுத் தூபி திரைநீக்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அஞ்சலியுரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு யோகி கூறினார்.

உபய கதிர்காமம் ஆரம்ப சுகாதார வைத்திய நிலைய வளவில் திரு சிவஞானஸ்கந்த மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தின் போது மறைந்த போராளி வதிரி ஜக்சனின் அன்னையார் திருமதி சிவபுண்ணியம் வேலாட்சியம்மா சிறீஸ்கந்தநாதனின் நினைவுத் தூபியைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய திரு யோகி மேலும் கூறியதாவது:-

நூற்றுக் கணக்கான போராளிகளை நாம் இழந்து விட்டோம். போராட்ட வரலாற்றில் இழப்புக்கள் ஏற்படத்தான் செய்யும், இழப்புக்கள் ஏற்படாமல் எந்தவொரு விடுதலைப் போராட்டமும் வெற்றி அடைவதில்லை. நேற்று எம்மோடு பேசி விளையாடியவர்களில் சிலர் எம்மிடையே இன்று இல்லை. எவ்வளவுதான் இழப்புக்கள் ஏற்பட்டாலும் எமது கொள்கையிலிருந்து நாம் சற்றேனும் பின்வாங்க மாட்டோம்.

இலங்கைத் தமிழர்களில் பலர் இன்று வெளிநாடுகளில் இருக்கிறார்கள். இவர்களில் பலர் அந்தந்த நாட்டின் பிரசைகளாகவும் மாறியுள்ளனர், தமிழ் மொழியையும், தமிழ் நாட்டையும் மறந்து ஆங்கில மொழியை பேசுகின்ற அநாதைகள் இவர்கள்.

தமிழர்களைப் பொறுத்தமட்டில் இக்காலகட்டம் மிகவும் முக்கியமானது. தமிழர்களின் உரிமைகளுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடிவரும் ஒரு காலகட்டம் இது. இப்போராட்ட வேளையில் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டாலும் அவற்றைக் கண்டு மக்கள் சோர்ந்து விடாமல் போராட்டத்துக்குரிய நடவடிக்கைகளில் முன்நிற்க வேண்டும் - என்றார்.

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. க. நடராசா பண்டிதர் க கணபதிப்பிள்ளை, சோ. அருணகிரி மருத்துவக்குழு சார்பில் சசிகலா, பலகங் ஆகியோர் உட்பட பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்கள்.

செல்வி அனுஷியாவின் கவிதையும் இடம் பெற்றது.

செல்வி நந்தினி நன்றியுரை கூறினார். (உ-157)

## ஆசிரியர்களுக்கு முதலுதவிப் பயிற்சி

வட்டுக்கோட்டை, ஏப் 6

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கு முதலுதவிப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

யாழ் கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி நெறிக்கு ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் இரண்டு ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டு முதலுதவிப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை அதிபர்களுக்கூடாக வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களது பாடசாலைகளுக்கு முதலுதவிப் பெட்டிகளும் வழங்கப்படும்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும். (இ-161)

### அடிக்கல்

வேலணை, ஏப். 6

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் இரண்டு புதிய வகுப்பறைக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த சனிக்கிழமை பாடசாலை அதிபர் திரு. இரட்ணராஜா தலைமையில் நடைபெற்றது (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BECON**

( C 156/3 ஸ்ரான்லி வீதி யாழ் நகர் )

MATHS ... திரு. நகுலேஸ்வரா
PHYSICS ... திரு. யோகானந்தா
CHEMISTRY ... திரு. பாபு
BOTANY ... திரு. சர்வானந்தா
ZOOLOGY ... திரு. தம்பிராஜா

வகுப்புகள் ஆரம்பம்

(1165)

# உதயன்

06. 04. 1987 திங்கட்கிழமை

**BECON**

(யாழ் ஸ்ரீதர் சினிமா முன்பாக)

பொருளியல் ... திரு. வரதராஜன்
கணக்கியல் — திரு. மரியதாஸ்
வர்த்தகம் ... திரு. ரட்ணம்
அளவையியல் ... திரு. S S மனோகரன்
இந்துநாகரிகம் — திருமதி அருள்நங்கை
தமிழ் — திரு. நாகேஸ்வரன்
புவியியல் — திரு. பாலா, சண்

வகுப்புகள் ஆரம்பம்

(1165)

## வித்தாரம்

என்ன, முரளி யாரே! இண்டைக்கும் வந்திட்டீர்போல.

எப்பிடி! கோட்டைக் காரர் இப்ப இரவிரவாச் சமா வைக்கிற ஒரு வழக்கத்துக்கு வந்திருக்கினம். ஷெல் அடிக்கும், ஹெலி சுட்டும் தமிழ்ச் சனம்சாகிறதுபோதாது. அவையை இரவில நித்திரை கொள்ளவிடாமல் அணு அணுவாய்க் கொல்லவேணும் எண்டு மேலிடத்து உத்தரவு வந்திருக்குதுபோல.

அதானதாலுக்கும் ஷெல்அடி சத்தி வாய்ந்ததோ பிரங்கி அடிச்சத்தி வாய்ந்ததோ எண்டு இரவிரவாய் போட்டி போட்டுச் சமா நடத்திறவைபோல.

உனக்கு ஒரு புதுமை தெரியுமே? கடந்த திங்கட்கிழமை நடந்த யாழ் ஆஸ்பத்திரித் தாக்குதல் சம்பந்தமாய் அரசாங்கத்தின்ரை மீடியா சென்ரரும், இலங்கை வானொலியும் ஏழு நாளுக்குப் பிறகு பெரிய கண்டுபிடிப்பைச் செய்திருக்கினம்.

ஆஸ்பத்திரி தாக்கப்பட்டபோது, இராணுவத் தளபதி நளின் செனிவிரத்தினவும் கட்டுப்படைத் தளபதி சிறிரணதுங்காவும் போயும் போயும் யாழ்ப்பாணம் கோட்டையில தானும் நிண்டவை.

கோட்டையில் இருந்து ஆஸ்பத்திரியை நோக்கி ஷெல் ஏவப்படயில்லை எண்டு அவையளில ஒருத்தர் சொன்னதாய் நேற்று வானொலி அறிவிச்சுது!

உதைச் சொல்லுறதுக்கு உந்தப்பெரிய உயர் அதிகாரிக்கு ஒருகிழமை எடுத்திருக்குப் பாக்கயில்லையே.

இதில என்ன விசேஷம் எண்டால் இரண்டு பேருமே முந்தி யாழ்ப்பாணத்தில பெரிய இராணுவ அதிகாரிகளாய் இருந்தவை இப்ப அவை இலங்கையிலேயே இராணுவத்துக்கும், கூட்டுப் படைக்கும் பெரிய அதிகாரியளாய் இருக்கினம், பெரிய அதிகாரியள் அனேகமாய் யாழ்ப்பாணம் வந்தால், வந்த பாதிநிட்டு உடனேயே கொழும்புக்குத் திரும்பிறவை. இவை இரண்டு பேரும் அண்டைக்கு வடக்கிலேயே தங்கியிருக்கினமாம். அதுவும் கோட்டையில தங்கியிருக்கினமாம்;

ஆஸ்பத்திரிச் சம்பவம் திங்கட்கிழமை விடியப்புறம் நடந்தது. அதுக்கு முதல் ஞாயிறு இரவும் (திங்கள் அதிகாலை எண்டும் சொல்லலாம்) ரவுணுக்குள்ள ஷெல் மாரி நடந்தது. அப்பவும் அவை கோட்டையிலதான் இருந்தினமோ என்னவோ…!

* * *

சொன்னுப் போல உந்தப் பதுங்கு குழி வெட்டுற வேலை இப்ப கனியான வருவாய் தாற தொழிலாய் மாறி விட்டுது. கல்லு நிலம், மண்டல் நிலம் எண்டு ஒவ்வொண்டுக்கு ஒவ்வொரு 'ரேட்'.

காசு இருக்கிறவை பிட்டை அப்பிடி வாங்கித்தாலேணும் ஆனால் பணவசதி இல்லாத சனம்…? காசில்லை எண்டதுக்காக அதுகள் சாக வேணுமே…? பணம் இல்லாததிற்காக அவை பிணமாக வேணும் எண்டு நியதியே!

கிராமங்களில சரி நகரங்களில சரி ஒருத்தருக்கு ஒருத்தர் பரஸ்பரம் உதவி செய்யிற முறையைக் கடைப்பிடிச்சால் காசு இருக்கிறவை மட்டும் தான் பதுங்கு குழி வெட்டமுடியும் எண்டதில்லை.

முந்தின காலத்தில துலாவால தண்ணீர் இறைக்கிறது முதல் சூடு மிதிக்கிறது வரைக்கும் உந்தப் பரஸ்பர உதவித்திட்டம் தானே இருந்தது. இப்ப பக்கத்து வீட்டில பாம்பு கடிச்சுச் செத்தாலும் அதைப்பற்றித் தெரியாது எண்டு சொல்லுற அளவுக்கு எங்கடை கட்டுறவு வாழ்க்கை கெட்டுப் போச்சு…!

கொண்டோடி

# ஆஸ்பத்திரி தாக்குதல் பற்றி விசாரிக்க தனிநபர் ஆணைக்குழு

## அரசு நியமிக்கும்

கொழும்பு, ஏப். 6

எட்டு நோயாளரையும் ஓர் ஊழியரையும் பலிகொண்ட யாழ் ஆஸ்பத்திரி ஷெல் தாக்குதல் சம்பவம் பற்றி விசாரணை செய்ய தனி நபர் விசாரணைக்குழு ஒன்றை அரசாங்கம் நியமிக்க இருப்பதாகத் தெரியவருகின்றது.

தமிழ், சிங்கள இனங்களைச் சேராத முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரையே தனி நபர் விசாரணையாளராக அரசாங்கம் நியமிக்கக் கூடும் என்றும் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அப்படி விசாரணைக் குழு நியமிக்கப்பட்டால் யாழ் ஆஸ்பத்திரி டாக்டர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனையோர் குழு முன் ஆஜராகி, சாட்சியளிக்கும்படி கோரப்படுவர் எனத் தெரியவருகிறது.

மார்ச் மாதம் 30ஆம் திகதி நிகழ்ந்த இந்த ஷெல் தாக்குதலின் போது ஏற்பட்ட 9 மரணங்கள் சம்பந்தமாக யாழ் நீதிவான் மரண விசாரணை நடத்தினார்.

முடிவில் யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலின் காரணமாக இம் மரணங்கள் சம்பவித்தன என்று தீர்ப்பு வழங்கியிருந்தார்.

இராணுவத்தினர் திட்டமிட்டு நடத்திய ஷெல் தாக்குதல் இது என்று ஆஸ்பத்திரிப் பணிப்பாளரும் மரண விசாரணையில் சாட்சியமளித்து இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட தினம் குறிப்பிட்ட நேரத்தில் ஷெல் தாக்குதலை தாங்கள் நடத்தவில்லை என்று இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர். (உ-எ)

## பத்திரிகையாளர் மீதான வழக்கு தள்ளுபடியானது

யாழ்ப்பாணம், ஏப். 6

பத்திரிகையாளர் திரு இரத்தினம் கந்தசாமிக்கு எதிரான வழக்கு, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலேயே அனுராதபுரம் நீதிவானால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து 'ஈழநாடு'பத்திரிகையைச் சேர்ந்த திரு. கந்தசாமியுடன் மற்றும் பிள்ளையார் பஸ்சேவை ஊழியர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

ஈழநாடு பத்திரிகையின் கொழும்பு அலுவலகத்தில் இருந்து யாழ் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிய செய்திப் பார்சல் தொடர்பாகவே திரு. கந்தசாமி கைது செய்யப்பட்டார்.

செய்திப் பார்சலைக் கொண்டுவந்த பிள்ளையார் சேவை பஸ் ஊழியர்கள் திரு. பி. நடராசா, திரு. என். பரம்சோதி, திரு. எம். ஜேசுதாசன் ஆகியோரும் அப்போது கைதுசெய்யப்பட்டனர்.

ஒரு மாதம் அனுராதபுரம் பொலிஸ் நிலையத்திலும் மூன்று மாதங்கள் அனுராதபுரம், போகம்பரை சிறைச்சாலைகளில் விளக்க மறியலிலும் வைக்கப்பட்டிருந்த இவர்கள், பின்னர் அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்,

தலா 5 ஆயிரம் ரூபா பிணையில் அனைவரும் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் மீதான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுராதபுரம்' நீதிவான் முன் வந்தது.

அன்றும் இவர்கள் மீது குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படவில்லை.

விசாரணைகள் முடிவடைந்து நீண்ட நாட்கள் கழிந்தும் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படாதது குறித்து சட்டத்தரணி ஏ. ஸி. எஸ். ஹமீது நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இது குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து தகவல் எதுவும் வராததினால் திரு கந்தசாமி உட்பட சகலரையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் சட்டத்தரணி ஹமீது விண்ணப்பித்தார்.

விண்ணப்பத்தை ஏற்று நீதிவான் நால்வரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (உ-எ)

# பெயர் குறிப்பிடாத செய்தியின் மூலம் ஓர் எச்சரிக்கை!

கொழும்பு, ஏப். 6

இலங்கை பிரிவினைவாதிகளுக்கு இந்தியா உதவுமானால், இந்தியா 18ஆகப் பிரியும்—

இப்படி இந்திய ராஜதந்திரி ஒருவர் பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தெரிவித்தார் என்று கொழும்பில் இருந்து வெளியாகும் அரசுக்கட்டுப்பாட்டில் உள்ள 'ஜனதா' மாலை சிங்களத் தினசரி செய்தி வெளியிட்டது.

இம்மாதம் 3ஆம் திகதி வெளியான 'ஜனதா'வில் இச்செய்தி பிரசுரமானது.

அந்த இந்திய இராஜதந்திரியின் பெயரை 'ஜனதா' பிரசுரிக்கவில்லை.

தீவிரவாதிகள் தமிழ்ப் போரில் வெற்றி காணமுடியாது, அயல்நாடான இலங்கைக்கு இந்தியா துரோகம் செய்யக்கூடாது — இப்படி அந்த இந்திய ராஜதந்திரி பிரதமர் காந்திக்குச் சொன்னார் என்று 'ஜனதா' செய்தியில் மேலும் கூறப்பட்டிருந்தது. (உ-ஐ-எ)

## ஷார்ஜா கிரிக்கெட் போட்டி; இந்தியா மீண்டும் வெற்றி!

ஷார்ஜா, ஏப் 6

நான்கு நாடுகளுக்கு இடையில் ஷார்ஜாவில் நடைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் இந்தியா நேற்று அபார வெற்றியீட்டியது.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆட்டத்திலேயே இந்திய அணி 7 விக்கெட்டுகளினால் வென்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி அணி இந்திய வீரர்களின் இறுக்கமான பந்துவீச்சால் ஓட்டங்களைக் குவிக்கமுடியாமல் திணறியது.

50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 176ஓட்டங்களை மட்டுமே ஆஸி அணியால் பெற முடிந்தது.

பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய இந்திய வீரர்கள் 42 ஓவர்களிலேயே 3 விக்கெட் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வென்றனர்.

இளம் இந்திய வீரர் அஸாருதீன் அற்புதமாகத் துடுப்பெடுத்தாடி 84ஓட்டங்களைப் பெற்றார் இவர் ஆட்டத்தின் சிறப்பு வீரராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தியாவின் முன்னணித் துடுப்பாட்ட வீரர் கவாஸ்கர் ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்களைப் பெற்றார்.

இவர்கள் இருவரும் ஜோடி சேர்ந்து ஆடிய வேளை 165 ஓட்டங்களைக் குவித்து ஷார்ஜா சுற்றுப் போட்டியில் சாதனை ஒன்றை நிகழ்த்தினர்.

முன்னர் இதேபோட்டியின் முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி இங்கிலாந்து அணியைத் தோற்கடித்தது என்பது தெரிந்ததே (உ)

| அணி | பங்குபற்றிய ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 2 | — | 4 |
| பாகிஸ்தான் | 1 | 1 | — | 2 |
| ஆஸ்திரேலியா | 2 | — | 2 | 0 |
| இங்கிலாந்து | 1 | — | 1 | 0 |

## பிளாஸ்டிக் காந்தம்!

லண்டன், ஏப்ரல் 5

உலகின் முதலாவது பிளாஸ்டிக்கிலான காந்தம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய விஞ்ஞானிகள் இதனைக் கண்டுபிடித்தனர் என்று லண்டனில் இருந்து வெளியாகும் 'நேச்சர்' என்ற விஞ்ஞான சஞ்சிகை செய்தி வெளியிட்டது.

இரும்பிலான காந்தத்திலும் பார்க்க இது ஆறு மடங்கு நிறை குறைவானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது — பிளாஸ்டிக் காந்தத்துக்குப் பெயர் 'பிபோ' என்பது.

வர்த்தக ரீதியில் புழக்கத்துக்கு விட சில காலம் எடுக்கும். (இ-எ)

## பஹ்ரைன் மசகு எண்ணெய்

பஹ்ரைன், ஏப்ரல் 5

முதல் தடவையாக வளைகுடா நாடுகளில் ஒன்றான பஹ்ரைன் சுத்திகரிக்கப்படாத எண்ணெயை சர்வதேசச் சந்தையில் விற்க முன்வந்துள்ளது.

55 ஆண்டுகளுக்கு முன்னர் பஹ்ரைனில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது.

## 40 வயதுக்கு மேற்பட்டோர் காவலிலிருந்து 150 பேர் விடுவிப்பு

கொழும்பு, ஏப் 6

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள 40 வயதுக்கு மேற்பட்டவர்களில் கடந்தமாத இறுதிவரை 150க்கும் அதிகமானோர் விடுவிக்கப்பட்டனர்.

இம்மாதமும் பலர் விடுவிக்கப்படுவர் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெலிக்கடைச் சிறை, பூஸா மற்றும் இராணுவ முகாம்களில் மூவாயிரத்துக்கு அதிகமான தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

40 வயதுக்கு மேற்பட்டோரை விடுவிக்கப்போவதாக அரசு அறிவித்திருந்ததற்கு இணங்கவே தொகுதி தொகுதியாக சிலர் விடுவிக்கப்பட்டு வருகின்றனர். (உ-ஐ-எ)

## நாட்டிய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்' ஏப்6

அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காக யாழ் நர்த்தனாலய மாணவர்களின் நாட்டிய நிகழ்ச்சி இன்று மாலை 3மணிக்கு வைலா சபதி கலையரங்கத்தில் நடத்தப்படுகிறது. (உ-10)

## கிழக்கில் 3 தாக்கு…

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கொல்லப்பட்டனர்;பலர் படுகாயமடைந்தனர்.

அவர்களிடமிருந்து பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

★ ஒரு ஏ கே. நம்மாஸின் எல் எம் ஜி (3 மேகஸி நம்மாஸின்)

★ ரி 56 ரக றைபிள்கள் மூன்று (8 ரவைக் கூட்டு அங்கிகள்)

★ இஸ்ரவேல் தயாரிப்பு கிறனேட்டுக்கள் இரண்டு

அம்பாறையில்

சனி காலை 6 30 மணியளவில் கஞ்சரம்குடா முகாமிலிருந்து திருக்கோவில் நோக்கி டிரக் இலும் ஜீப் வண்டி ஒன்றிலும் ரோந்து சென்ற படையினர்மீது கண்ணிவெடித் தாக்குதல் நிகழ்த்தப்பட்ட. த ஜீப் பலத்த சேதமடைந்தது. அதில் வந்த ஏழு கொமாண்டோக்களும் அந்த இடத்திலேயே பலியாகினர்.

எமதுதரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

மட்டக்களப்பு

நேற்றுக்காலை 6 மணியளவில் கொக்கட்டிச்சோலையில் எமது முகாமை முற்றுகையிட கொமாண்டோக்கள் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது கொமாண்டோக்கள் பின்வாங்கினர். இந்தச் சம்பவத்தில் இரு கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர்.

—இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-10)

## வல்வையில் இறந்தவர் வயோதிப மாது

யாழ்ப்பாணம்,ஏப6

வல்வையில் கடந்த சனியன்று சுடப்பட்டவர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் இறந்தவர் 80 வயதான வேலுப்பிள்ளை பாலமணி ஆவர்.

நேற்றைய உதயனில் வெளிவந்த செய்தியில் பாலமணியின் வயது எட்டு என்று தெரிவிக்கப்பட்டிருந்தது தவறு என வல்வைச் செய்தியாளர் தெரிவிக்கிறார் (உ)

## ஆனந்த…

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

திரு முன்னாள் திண்டிவனம் எம்.பி திரு இராமமூர்த்தி உட்பட பல இந்திரா காங்கிரஸ் தலைவர்களுடன் திரு.சிதம்பரம் பேச்சுக்களை நடத்தினார்.

இதனிடையில் சட்டசபைக் கூட்ட நடவடிக்கைகள் பற்றி குறிப்பு எடுப்பது இல்லை என்று செய்தியாளர் தீர்மானித்துள்ளனர்

இது குறித்து கருத்தும் தெரிவித்த திரு. சிதம்பரம், இதனைத் தவிர்க்க சட்டசபை தக்கநடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

[illegible] அதிகாரியுடன் [illegible] த்து பல பத்திரிகையாளர்களும் பத்தி[illegible]

## காவலில் - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடுத்து தப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு தப்பிச்செல்ல முனைந்தனர்.

இதைத் தொடர்ந்து முகாமிலிருந்த எமது ஏனைய வீரர்களுக்கும் குற்றவாளிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது அவர்களும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு ஆயுதங்களுடன் இருந்தமையால் அவர்களைக் கைதுசெய்ய முடியாது சுடவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

இந்த துப்பாக்கிச் சண்டையில் எமது இயக்க வீரர்கள் இருவரும் எமது பாதுகாப்பிலிருந்த 18 பேரும் கொல்லப்பட்டனர்.

சேதி முயற்சியை முறியடிக்க இறுதிவரை போராடிய சுரேஸ் (திருமலை 6வது பிரிவு) நாதன் (மன்னார் 4வது பிரிவு) ஆகியோர் வீரமரணமடைந்தவர்.

இந்தப் 18 பேரை விட எமது பாதுகாப்பிலுள்ள வேறு எவரையும் அவர்களின் உறவினர்கள் எந்த நேரமும் பார்வையிட அனுமதிக்கப்படும்.

இச்சம்பவம் குறித்து நாம் ஏற்கனவே எமது பிரசார சாதனங்களின் வாயிலாகவும், மரணமடைந்த குற்றவாளிகளின் உறவினர்களுக்கு நேரடியாகவும் தெரியப்படுத்தியிருந்த போதும் ஒரு சில தீய சக்திகள் திட்டமிட்ட பொய் பிரச்சாரத்தில் இறங்கி வருகின்றன.

இப் பொய்ப்பிரச்சாரத்திலும் சதிமுயற்சியிலும் ஈடுபடு வோரை இனங்காட்டி தமிழீழ விடுதலைக்கு உதவுமாறு எம்மக்களை வேண்டிக்கொள்கின்றோம்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-10)

[illegible] ரிகை ஆசிரியர் சங்கமும் [illegible] தெரிவித்துள்ளன. (உ-எ)

## பாதுகாப்புச் செலவும் அபிவிருத்திச் செலவும் ஒன்று என்கிறார் லலித்

கொழும்பு, ஏப்ரல் 6

பாதுகாப்புக்கு செலவிடும் பணத்தையும் அபிவிருத்திக்குச் செலவிடும் பணத்தின் ஒரு பகுதியாகவே கருதவேண்டும்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெல்தெனியவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்புக்குக் கூடுதல் நிதியை ஒதுக்குவது பற்றி குறைப்படுவோர் ஒன்றை உணருகிறார்களில்லை. பாதுகாப்புக்கு செலவிடுவது, நாட்டின் இறைமையை மட்டும் காப்பாற்ற பயன்படவில்லை; நாட்டின் அபிவிருத்தியைப் பாதுகாக்கவும் பயன்படுகின்றது என்பதையும் அவர்கள் உணரவேண்டும்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் பலவீனமாக இருந்த காரணத்தினால் தான் இலங்கை பலமுறை ஆக்கிரமிப்புக்குள்ளானது.

சரியான பாதுகாப்பு நடவடிக்கைகள் இல்லாத படியினால்தான் உலகின் பழம்பெரும் நாகரிகங்கள் அழிந்துபோய்விட்டன.

அனுராதபுர, பொலன்னறுவை காலத்திய நாகரிகத்துக்கு என்ன நடந்தது என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார். (இ-எ)

## யாழ் - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ணச்சடங்குகள் செப்பிட்டிக் கொலவையில் உள்ள அவரது வீட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்ததாகவும்—

மரணச்சடங்கில் பங்கு கொண்டசிலரே பஸ்மீது கல்வீச்சு நடத்தினர் எனவும் கூறப்படுகிறது.

பஸ்ஸின் கண்ணாடிகள் மட்டும் சேதமடைந்தன. பயணிகள் எவரும் காயமடையவில்லை (உ-10)

## நகரை - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நகரம் அதிர்ந்தது

கே கே எஸ் வீதியில் சேதமடைந்த பல கடைகளில் இருந்து பொருள்கள் நேற்று வேறிடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டன. (உ-10)

## சென். ஜோன் அம்புலன்ஸ் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

சென். ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினரால் புதிதாக உருவாக்கப்பட்ட சண்டுக்குளி வெளிவாரிப் பிரிவின் பயிற்சி வகுப்புக்கள் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன

தொடர்ந்துபிரதி சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3-30மணிக்கு இந்த முதலுதவி பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையில் நடைபெறும் இந்த வகுப்புக்களுக்கு இதுவரை சமூகமளிக்காத ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றி தமது பயிற்சி களைத் தொடரலாம் என்று இந்தப் பிரிவின் தற்காலிக தலைவர் தெரிவித்தார்.

இந்த புதிய பிரிவை மே மாத முதல் வாரத்தில் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-7)

## 60 ஆலயங்களில் அகண்டநாம பஜனை

சாவகச்சேரி, ஏப்ரல் 6

சாவகச்சேரித்தொகுதியில் உள்ள சுமார் 60 ஆலயங்களில் தினமும் காலையும் மாலையும் இரண்டுவேளை அகண்ட நாம பஜனையைநடத்துவதற்கு ஆத்மஜோதி ஆசிரியர் சிவத்திரு நா. முத்தையா ஏற்பாடு செய்துள்ளார்

வெள்ளிக்கிழமையன்று நுணாவில் மேற்கு மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் இடம்பெற்ற அகண்டநாம பஜனையில் சாவகச்சேரி சைவமகாசபை, திவ்ய ஜீவன சங்கம், மட்டுவில் இந்து இளைஞர் ஒன்றியம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் உட்பட ஆண்களும் பெண்களுமாக சுமார் இருநூறு பேர் வரை கலந்து சிறப்பித்தனர். (உ)

## வலதுசாரி அரசு கவிழ்ந்தது

போர்த்துக்கல் ஏப். 5

போர்த்துக்கலின் வலதுசாரி அரசாங்கம் கவிழ்ந்தது.

250 உறுப்பினர்களைக் கொண்ட போர்த்துக்கலின் நாடாளுமன்றம் கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதன் மூலம், அரசு கவிழ்க்கப்பட்டது.

இடதுசாரிக் கட்சிகளே இக்கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருந்தன.

புதிய அரசு அமைக்கப்படுமா? அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படுமா? என்பதை ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டியுள்ளது. (இ-எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15, ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 06 - 04 - 1987 தொலைபேசி இல. 24805, 22073

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office. Under Number QJ / 94 / N/87 Telephone. 24805, 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org